©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs.2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 49] CHENNAI, WEDNESDAY, DECEMBER 2, 2020
Karthigai 17, Saarvari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

| | Pages. |
|---|---|
| HOME DEPARTMENT | |
| Delhi Special Police Establishment Act.—Transfer of Case Registered by the Theni District Crime Branch in Crime No.15 of 2018 to the Central Bureau of Investigation for further investigation. | 726 |
| LABOUR AND EMPLOYMENT DEPARTMENT | |
| Minimum Wages Act.— Inclusion of the Employment in Data Entry Operations (other than Government) Part-I of the Schedule. .. | 726 |
| Labour Courts for Adjudication .. .. | 726-728 |

## NOTIFICATIONS BY GOVERNMENT

HOME DEPARTMENT

**Transfer of Case Registered by the Theni District Crime Branch in Crime No.15 of 2018 to the Central Bureau of Investigation for further investigation under the Delhli Special Police Establishment Act.**

*[G.O. Ms. No. 456, Home (Police-IX), 12th November 2020.]*

No.II(2)/HO/786/2020.—Under Section 6 of the Delhi Special Police Establishment, Act, 1946 (Central Act 25 of 1946), the Governor of Tamil Nadu, hereby, accords his consent to the extension of the powers and Jurisdiction of the members of the Delhi Special Police Establishment to the whole of the State of Tamil Nadu to investigate the case registered by the District Crime Branch, Theni District in Crime No.15 of 2018 under Sections 120-B, 406 and 420 of the Indian Penal Code (Central Act XLV of 1860).

S.K. PRABAKAR,
*Additional Chief Secretary to Government.*

LABOUR AND EMPLOYMENT DEPARTMENT

**Inclusion of the Employment in Data Entry Operations (other than Government) in Part-I of the Schedule under the Minimum Wages Act.**

*[G.O. Ms. No. 182, Labour and Employment (J2), 11th November 2020, ஐப்பசி 26, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051.]*

No.II(2)/LE/787/2020.—Whereas, the Governor of Tamil Nadu is of the opinion that minimum rates of wages should be fixed under the Minimum Wages Act, 1948 (Central Act XI of 1948), in respect of the employment in Data Entry Operations (other than Government).

2. Now, Therefore, in exercise of the powers conferred by Section 27 of the said Act, the Governor of Tamil Nadu hereby gives notice of his intention to add the said employment in Part I of the Schedule to the said Act, as required by the said section.

3. Any objection or suggestion, which may be received with respect to the proposed addition on or before the expiry of three months from the date of publication of this Notification in the *Tamil Nadu Government Gazette,* will be considered by the Government of Tamil Nadu. Objection or suggestion, if any, should be addressed to the Additional Chief Secretary to Government of Tamil Nadu, Labour and Employment Department, Secretariat, Chennai-600 009 through the Commissioner of Labour, Teynampet, Chennai-600 006.

**Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.**

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்) கோவை.**

*[அரசாணை (டி) எண். 527, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 21 அக்டோபர் 2020, ஐப்பசி 5, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No.II(2)/LE/788/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை கோட்டம்) கோவை என்ற நிர்வாகத்திற்கும் கோவை திருப்பூர் நீலகிரி மாவட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது தொழிலாளர் சங்கம், கோவை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின்**10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. E. தங்கவேல், (ப. எண் சி018318), ஓட்டுநருக்கு 1/ஜி8(0)/3353/தஅபோக/15, நாள். 27—08—2015ம் தேதியிட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை வழங்கி எந்த இறுதி உத்தரவினையும் வழங்காமல் ஜுன்—2017ம் மாத சம்பளப் பட்டியலின்படி ரூ.100/—ஐ பிடித்தம் செய்து நிர்வாகம் உத்தரவிடப்பட்டுள்ளதை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலம்.**

*[அரசாணை (டி) எண். 539, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 23 அக்டோபர் 2020, ஐப்பசி 7, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு—2051.]*

No.II(2)/LE/789/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் சங்கம், திருச்சி என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற் தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947—**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற் தகராறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947—**ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து

மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. G. அன்பழகன், ஓட்டுநருக்கு, வருடாந்திர ஊதிய உயர்வினை 2 வருட காலத்திற்கு கூட்டு விளைவுடன் தொடர்ந்து தள்ளி வைத்தும், தற்காலிக வேலை நீக்கத்திலிருந்த 13–06–2012 முதல் 12–07–2012 வரையிலான நாட்களை தகுதிக்குட்பட்ட விடுப்பாக கருதியும் நிர்வாகம் வழங்கிய 05–03–2015 நாளிட்ட தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்), லிமிடெட், கடலூர்.**

*[அரசாணை (டி) எண் 540, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2)த் துறை, 23 அக்டோபர் 2020, ஐப்பசி 7, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/790/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிட்டெட், கடலூர் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் சங்கம் (CITU), கடலூர் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற் தகராறை, நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற் தகராறு கடலூர், தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. R. முருகன், (பணி எண் DR5751), ஓட்டுநரின் வருடாந்திர ஊதிய உயர்வினை 5 வருட காலத்திற்கு நிரந்தரமாக தள்ளி வைத்து நிர்வாகம் வழங்கிய 24–11–2015 நாளிட்ட உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம்.**

*[அரசாணை (டி) எண். 541, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி2) த் துறை, 23 அக்டோபர் 2020, ஐப்பசி 7, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/791/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் என்ற நிர்வாகத்திற்கும், அரவிந்த் கெஜ்ரிவால் தமிழ்நாடு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன், மதுரை மாவட்டம் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை நீதிமன்ற தீர்விற்கு அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மேற்சொன்ன தொழிற் தகராறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்விற்கு அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. பி. ஆர். இரமேஷ், நடத்துநருக்கு (பணி எண் 08 CR 276) வருடாந்திர ஊதிய உயர்வை 2 வருட காலத்திற்கு அதன் திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்து நிர்வாகத்தால் வழங்கப்பட்ட16–10–2014 நாளிட்ட தண்டனை உத்தரவை இரத்து செய்து, மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய பணப்பலன்களை முறையாக கணக்கிட்டு, நிலுவை தொகையை வழங்க வேண்டும் என்ற தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**எல்ஜிபி லிமிடெட், வையப்பாளையம் பிளாண்ட், கோவை.**

*[அரசாணை (டி) எண். 574, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 12 நவம்பர் 2020, ஐப்பசி 27, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/792/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக எல்ஜிபி லிமிடெட், வையப்பாளையம் பிளாண்ட், கோவை என்ற நிர்வாகத்திற்கும், கோவை மாவட்ட செயலாளர், உழைப்போர் உரிமை இயக்கம், இணைப்பு (AICCTU) (பதிவு எண். 3077/CNI) என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற் தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

நிர்வாகம், தொழிலாளி திரு. ஆர். சுவாமிநாதன் என்பவரை கோவை, வையம்பாளையம் யூனிட்டிலிருந்து ருத்ராபூர் பந்த் நகருக்கு பணியிடமாற்றம் செய்துள்ளதை ரத்து செய்யுமாறு கோரும் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**BBTC தேயிலை நிறுவனம், தாய்முடி எஸ்டேட், வால்பாறை.**

*[அரசாணை (டி) எண். 575 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 12 நவம்பர் 2020, ஐப்பசி 27, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/793/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக BBTC தேயிலை நிறுவனம், தாய்முடி எஸ்டேட், வால்பாறை என்ற நிர்வாகத்திற்கும், ஆனைமலை ஒர்க்கர்ஸ் யூனியன், வால்பாறை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

BBTC தேயிலை நிறுவன தாய்முடி எஸ்டேட், தேயிலை ஆலை நிர்வாகத்தால் திருமதி தேவிசகிலா என்பவருக்கு 2015 முதல் 2018 வரை நிர்ணயிக்கப்பட்டு அன்னார் செய்து வந்த பச்சை தேயிலை இலை எடை போடுதல் / பச்சை இலை தரம் பரிசோதித்தல் / தேயிலை இலை திருப்பப்படுதல் போன்ற பணிகளை மீண்டும் வழங்குமாறும் கோரும் தொழிற் சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை.**

*[அரசாணை (டி) எண். 577 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 12 நவம்பர் 2020, ஐப்பசி 27, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/794/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோவை என்ற நிர்வாகத்திற்கும், கோவை திருப்பூர் நீலகிரி அரசு கோக்குவரத்துக் கழக பொது தொழிலாளர் சங்கம், கோவை என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும் 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் கோவை தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கோவை தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

**கோரிக்கை எண். 2**

திரு. நா. கிருஷ்ணமூர்த்தி (ப.எண். 11174) நடத்துனருக்கு ரூ.200/– வீதம் அபராதம் விதித்து நிர்வாகம் வழங்கிய 16–07–2014 நாளிட்ட உத்தரவினை இரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**1570, வகுரம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., நாமக்கல்.**

*[அரசாணை (டி) எண். 587, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (டி1)த் துறை, 13 நவம்பர் 2020, ஐப்பசி 28, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051.]*

No.II(2)/LE/795/2020.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் தொடர்பாக 1570, வகுரம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் லிட்., நாமக்கல் என்ற நிர்வாகத்திற்கும், சேலம் மண்டல அனைத்துப் பணியாளர் சங்கம் சேலம் என்ற தொழிற் சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை எழுவினாவுடன் சேலம் தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு சேலம் தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. V. மூர்த்தி விற்பனையாளர் என்பவருக்கு சிற்றெழுத்தர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

முகமது நசிமுத்தின்,
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU